முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 16.03.2026, அ.வ.எண். 48/2012 , பி.வா.சா.1. ராமசாமி, த/பெ. பழனியப்பன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) பி வா சா ஆ 1 ஆவணம் உயிலை நான் படித்துப் பார்த்துள்ளேனா என்றால் படித்துப் பார்த்துள்ளேன். வெள்ளியங்கிரிதேவரின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வெள்ளியங்கிரிதேவரின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பி வா சா ஆ 1 ஆவணம் யார் பெயருக்கு வெள்ளியங்கிரி தேவர் எழுதிவைத்தார் என்றால் பொன்னம்மாள் என்கிற கருப்பத்தாளுக்கு எழுதி வைத்தார். பொன்னம்மாள் என்கிற கருப்பத்தாளின் இறப்பு சான்றிதழ். வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பொன்னம்மாளின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) பி வா சா ஆ 1 ன் அசல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. பி வா சா ஆ 1 ஆவண உயிலில் 4 சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் எந்த சொத்தில் நான் குடியிருக்கிறேன் என்றால் வீதியை ஒட்டி உள்ள இடத்தில் வீடு உள்ளது. எனது வீடு வடக்கு வாசல் வீடு என்றால் சரியல்ல. கிழக்கு பார்த்த வீடு ஆகும். வடக்கு வாசல் வீடு யார் வீடு என்றால் ரங்கசாமி தேவர் வீடு ஆகும். தாவா சொத்திற்கு அருகில் எனது வீடு உள்ளது என்பதை காண்பிக்க எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றும் பி வா சா ஆ 1 ற்கும் தாவா சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்/- (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி

3) சொத்தின் நீள அகலம் என்ன என்றால் தெற்கு வடக்கில் 13 1/2 அடி கிழ மேற்கில் 24 அடி ஆகும், அதற்கு பின்புறம் எங்களது மாட்டுச்சாளைஉள்ளது. மேற்படி சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க எவ்வித ஆவணங்களும் இல்லை என்றால் பி வா சா ஆ 1 ஆவணமும் அதற்கு பின்னிட்டு பொன்னம்மாளுக்கு பாத்தியப்பட்டு அவர்களது வாரிசுகளுக்கு வந்தது. மேற்படி சங்கதிக்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

4) நான் பெரியபோதுவில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். தாவா சொத்து எங்கு அமைந்துள்ளது என்றால் எம்மே கவுண்டன் பாளையத்தில் அமைந்துள்ளது.பெரிய போதுவிற்கும் எம்மே கவுண்டன் பாளையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 35 கி.மீ தூரம் இருக்கும். நான் பெரிய போதுவிற்கு குடி பெயர்ந்து எவ்வளவு ஆண்டுகள் ஆகிறது என்றால் 27 ஆண்டுகள் ஆகிறது. சொத்தின் அளவுகள் குறித்து நான் கூறிய இடத்தில் வீடு எதுவும் இல்லை என்றால் சரிதான். காலியிடம் தான் உள்ளது. வாதி செப்டிங் டேங்க் கட்டியுள்ள இடம் வாதியின் வீட்டின் தென்புறத்தில் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. கட்டுவதற்கு குழி தோண்டினார் நான் தடுத்துவிட்டேன். அந்த செப்டிங் டேங்கை தான் தற்போது வாதி பயன்படுத்தி வருகிறார் என்றால் அங்கு செப்டிங் டேங்க்கே கிடையாது.

5) வழக்கிற்கு முன்பிருந்தே அந்த செப்டிக் டேங்கை தான் வாதி பயன்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. பள்ளம் எடுத்த போதே நான் தடுத்ததால் அது அப்போதே மூடப்பட்டு விட்டது அவ்வாறு நான் சொல்வது பொய் என்றால்

ஒப்பம்/– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி

சரியல்ல. வாதி அந்த செப்டிக் டேங்கை தான் வாதி பயன்படுத்தி வருகிறார் என்றும் அதற்கும் சேர்த்து நான் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. செப்டிக் டேங்க் கிடையாது. பி வா சா ஆ 3 ல் உள்ள மொழி என்ன மொழி என்றால் கன்னடம் மொழியில் உள்ளது. அதற்கான தமிழாக்கம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பி வா சா ஆ 5 , 6 மற்றும் 7 ஆவணங்கள் இல்லாத வீட்டிற்கு வரி செலுத்தியுள்ளதால் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

6) பி வா சா ஆ 4 என்ன வழக்கிற்காக புகார் கொடுக்கப்பட்டது என்பதற்கான விளக்கம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. பி வா சா ஆ 8 புகைப்படங்களில் வாதி கட்டியுள்ள செப்டிக் டேங்க் உள்ளது என்றால் சரியல்ல. புகைப்படத்தில் உள்ள பள்ளம் செப்டிக் டேங்க் என்றால் சரியல்ல. அதை தான் நான் தடுத்துவிட்டேன். நான் சொல்வது சரியல்ல அந்த இடத்தில் தற்போது செப்டிக் டேங்க் முழுவதுமாக கட்டி முடிக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. வாதி செப்டிக் டேங்க் கட்டியுள்ள இடம் எனக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. அந்த இடத்தில் பள்ளம் எடுத்ததால் அங்கு குடியிருக்கும் மக்கள் நடமாட முடியாமல் இடையூறாக இருந்து வருகிறது.

7) வாதி வீட்டிற்கு தென்புற வாசல் பகுதியில் பொது இடத்தில் கழிவறை கட்டியுள்ளார் என்றால் சரிதான். வாதி கழிவறை கட்டியுள்ள பகுதி யாருக்கு சொந்தமானது என்றால் பொது தடமாகும். பொதுத் தடத்தை மறைத்து கழிவறை கட்டியதற்கு வழக்கு ஏதேனும் போட்டுள்ளேனா என்றால் நான் கேட்டதற்கு பிரித்து விடுகிறேன் என்று சொன்னதால் வழக்கு போடவில்லை. 14 ஆண்டுகளாக

ஒப்பம்/– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி

கழிவறை கட்டியது சம்மந்தமாக வழக்குபோட்டுள்ளேனா என்றால் இல்லை. பொதுத் தடம் என்பதுகுறித்து ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அது சம்மந்தமாக 14 ஆண்டுகளாக எவ்வித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8) வாதி அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் கழிவறை மற்றும் செப்டிக் டேங்க் கட்டி பயன்படுத்தி வருகிறார் என்றும் வழக்கிற்காக நான் மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் வீடு, அதன் தென்புறத்தில் உள்ள காலியிடத்தையும் சேர்த்து வா சா ஆ 3 பட்டா வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா சா ஆ 1 மற்றும் 2 ஆவணங்களை மூல ஆவணங்களாக வைத்து தான் வா சா ஆ 3 பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து வாதிக்கு முழுமையாக பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

9) பி வா சா ஆ 1 ஆவணத்தில் குப்பத்தேவர் வீட்டிற்கும் தெற்கு என்று குறிப்பிட்டுள்ள நிலையில் நான் கருப்பத்தேவர் வீட்டிற்கும் தெற்கு என்று மாற்றி எனக்கேற்றாற் போல் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. கட்டிட பணி மேற்கொள்ளக்கூடாது என்று எவ்வித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.தாவா சொத்திற்கு வாதி மட்டுமே முழுமையான பாத்தியஸ்தர் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் நான் கொடுத்தது பொய்யான புகார் என்பதால் தான் காவல்துறையினர் எனது புகாரின் பேரில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வாதி வா சாஆ 3 பட்டாவில் உள்ள ஒரு பகுதியில் தான் கட்டுமானப்ப ணி மேற்கொண்டார் என்றும் அதை தடுப்பதற்கு

ஒப்பம்/- (R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
பொள்ளாச்சி

எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

10) தாவா சொத்திற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லாத நிலையில் வாதியின் உரிமையை தடை செய்ய எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் வாதியின் வழக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வாதி கட்டுமானப் பணி மேற்கொண்டார் என்பதை காண்பிக்க நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் இல்லை. அவ்வாறு நடவடிக்கை எடுக்காததற்கு காரணம் தாவா சொத்து வாதிக்குபாத்தியப்பட்டது என்பதால் தான் என்றால் சரியல்ல.

ஒப்பம்/– (R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
பொள்ளாச்சி